# 11 பரீட்சை மீதி




இவ் அத்தியாயத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.

11.1 பரீட்சை மீதிக்கான அறிமுகம்

11.2 மூல ஏட்டுக் கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டிற்கு மாற்றுதல்

பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்தல்

பரீட்சை மீதி தயாரித்தல்

## 11.1 பரீட்சை மீதிக்கான அறிமுகம்

இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமைய பேரேட்டுக் கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்களின் இரட்டைப் பதிவுகள் ஒரு கணக்கில் வரவிலும் அதனோடு தொடர்புடைய மற்றோர் கணக்கில் செலவிலும் பதியப்படும். இதற்கமையப் பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்திய பின்னர் வரவு , செலவு என்னும் வகையில் மீதிகளைப் பெற முடியும். கொடுக்கல் வாங்கல்கள் இரட்டைப் பதிவு விதிமுறைக்கமைய சரியாகப் பதிவிற்குட்பட்டிருப்பின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகையும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகையும் சமமாகக் காணப்படும்.

குறித்த கால இறுதியில், பேரேட்டுக் கணக்குகளின் வரவு மீதிகளையும் செலவு மீதிகளையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்படும் பட்டியலானது **''பரீட்சை மீதி''** எனப்படும். பரீட்சை மீதி ஒரு கணக்கல்ல. இது மீதிகளின் ஆவணமாக இருப்பது மட்டுமன்றி பேரேடுகளின் சுருக்கமாகவும் அமையும்.

பொதுவாகச் சமமான பெறுமானத்தில் இரட்டைப்பதிவுகள் பதியப்பட்டு கணக்குகள் சரியாகச் சமப்படுத்தப்பட்டிருப்பின் அதன் வரவு மீதிகளின் கூட்டுத்தொகையும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகையும் சமனானதாக அமையும். இதற்கமையப் பரீட்சை மீதியொன்றின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகையும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகையும் சமப்படுமாயின் பின்வரும் இருவிடயங்கள் உறுதிப்படுத்தப்படும்.

1. கணக்குகளின் வரவில் காணப்படும் பெறுமதியும் செலவில் காணப்படும் பெறுமதியும் சமனாகக் காணப்படும்.

2. கணக்குகள் சரியாகச் சமப்படுத்தப்பட்டிருக்கும் (எண் கணித ரீதியாகச் சரியான தன்மை பேணப்பட்டுள்ளது.)

உதாரணம் ః

20XX.01.01 ஆம் திகதியில் விஜய் வணிகத்தின் பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட மீதிகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| காசு | 40 000 |
| கொள்வனவுகள் | 150 000 |
| விற்பனைகள் | 365 000 |
| கடன்பட்டோர் | 35 000 |
| கடன் கொடுத்தோர் | 24 000 |
| காப்புறுதிக் கட்டணம் | 6 000 |
| தளபாடம் | 20 000 |
| பெற்ற கழிவு | 8 000 |

| | |
|---|---|
| கொடுத்த கழிவு | 4 000 |
| மோட்டார் வாகனம் | 400 000 |
| வாடகை | 30 000 |
| எழுது கருவிச் செலவுகள் | 5 000 |
| 12% முதலீடு | 50 000 |
| முதலீட்டு வருமானம் | 3 000 |
| 15% வங்கிக் கடன் | 90 000 |
| 20XX.01.01 திகதியில் மூலதனம் | 250 000 |

இம்மீதிகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி கீழே காட்டப்பட்டுள்ளது.

விஜய் வணிகத்தின்
20XX.06.30 ஆம் திகதிக்கான பரீட்சை மீதி

| விபரம் | வரவு ரூ. | செலவு ரூ. |
|---|---|---|
| காசு | 40 000 | |
| கொள்வனவு | 150 000 | |
| விற்பனை | | 365 000 |
| கடன்பட்டோர் | 35 000 | |
| கடன் கொடுத்தோர் | | 24 000 |
| காப்புறுதிக் கட்டணம் | 6 000 | |
| தளபாடம் | 20 000 | |
| பெற்ற கழிவு | | 8 000 |
| கொடுத்த கழிவு | 4 000 | |
| மோட்டார் | 400 000 | |
| வாடகைக் கொடுப்பனவு | 30 000 | |
| எழுதுகருவிச் செலவு | 5 000 | |
| முதலீடு 12% | 50 000 | |
| முதலீட்டு வருமானம் | | 3 000 |
| வங்கிக் கடன் 15% | | 90 000 |
| மூலதனம் | | 250 000 |
| | 740 000 | 740 000 |

## 11.2 மூல ஏடுகளின் கொடுக்கல் வாங்கல்களைப் பேரேடுகளிற்கு மாற்றுதல்

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இவ்வணிகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மூல ஏடுகளில் பதிவு செய்யப்பட்டுப் பேரேடுகளிற்கு மாற்றப் பட்டுள்ளன. கொடுக்கல் வாங்கல்கள் மூல ஏடுகளில் பதிந்து அவை பேரேடுகளுக்கு மாற்றப்பட்ட முறையினையும் அப்பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட மீதிகளைக்கொண்டு பரீட்சை மீதி தயாரிக்கப்பட்ட முறையினையும் கீழே காட்டப்பட்டுள்ள உதாரணத்தின் மூலம் அறிந்து கொள்வோம்.

*உதாரணம் ඃ*

*கவிதா வணிகத்தின் **2012** ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

| | |
|---|---|
| 20XX.01.01 | ரூ. 200 000 மூலதனமாக இடப்பட்டு வணிகம் ஆரம்பிக்கப் பட்டது. |
| 01.02 | காசு மூலம் கொள்வனவு ரூ. 85 000 |
| 01.03 | வங்கியில் ரூ. 20 000 இடப்பட்டு நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது. |
| 01.04 | பெற்ற வங்கிக் கடன் ரூ. 50 000. |
| 01.05 | காசுக்கு விற்பனை ரூ. 150 000 |
| 01.08 | வாடகையாக ரூ. 2 000 கொடுக்கப்பட்டது. |
| 01.10 | சுவர்ணாவிடம் (கடன் பட்டோர்) பெற்ற காசு ரூ. 11 600 கொடுத்த கழிவு ரூ. 400. |
| 01.12 | வங்கிக் கடன் ரூ. 3 000 செலுத்தப்பட்டது. |
| 01.20 | கௌரியிடமிருந்து (கடன்பட்டோர்) பெற்ற காசோலை ரூ. 9000 |
| 01.25 | சுரங்கிக்குக் (கடன்கொடுனர்) கொடுத்த காசு ரூ. 7 600 பெற்ற கழிவு ரூ. 400 |
| 01.26 | கரனிற்கு (கடன்கொடுனர்) செலுத்த வேண்டிய ரூ. 12 000 5% கழிவு நீக்கிச் செலுத்தப்பட்டது. |

**வங்கி நடைமுறைக் கணக்கினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | |
|---|---|
| 01.08 | ரூ. 15 000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டு விற்பனைக்காகப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 01.11 | சுவர்ணாவிடமிருந்து பெற்ற காசோலை ரூ. 6 200 கொடுத்த கழிவு ரூ. 300 அக்காசோலை அன்றைய தினமே வைப்பிலிடப்பட்டது. |

01.18 காசோலை மூலம் வாடகை கொடுத்தது ரூ. 2 000

01.27 கௌரியிடமிருந்து 20.01.2012 பெற்ற காசோலை வைப்பிலிடப் பட்டது.

**விற்பனைப் பொருள்கள் கடனுக்குக் கொள்வனவு செய்வது தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்**

01.06 பட்டியல் இல 45 இற்கமைய சுரங்கியிடமிருந்து கொள்வனவு ரூ. 24 000

01.08 பட்டியல் இல 116 இற்கமைய கரனிடமிருந்து கொள்வனவு ரூ. 20 000

விற்பனைப் பொருள்கள் கடனுக்கு விற்பனை செய்வது தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்

01.05 பட்டியல் இல 1 இற்கமைய சுவர்ணாவிற்கு விற்பனை ரூ. 19 000

01.09 பட்டியல் இல 2 இற்கமைய கௌரிக்கு விற்பனை ரூ. 25 000

வேண்டப்படுவது.

20XX.01.31 முடிவடைந்த மாதத்திற்கான

01. கழிவு நிரலுடன் கூடிய காசுக் கணக்கு
02. கழிவு நிரலுடன் கூடிய வங்கிக் கணக்கு
03. கொள்வனவு நாட்குறிப்பு
04. விற்பனை நாட்குறிப்பு
05. உரிய பேரேட்டுக் கணக்குகள்
06. 20XX.01.31 இலுள்ளபடியான பரீட்சை மீதி

வரவு காசுக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | கழிவு | காசு | திகதி | விபரம் | கழிவு | காசு |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.01.01 | மூலதனம் | | 200 000 | 20XX.01.02 | கொள்வனவு | | 85 000 |
| 01.04 | வங்கிக்கடன் | | 50 000 | 01.03 | வங்கி | | 20 000 |
| 01.05 | விற்பனை | | 150 000 | 01.08 | வாடகை | | 2 000 |
| 01.10 | சுவர்ணா(கடன்படுனர்) | 400 | 11 600 | 01.12 | வங்கிக்கடன் | | 3 000 |
| 01.20 | கௌரி(காசோலை) | | 9 000 | 01.25 | சுரங்கி (கடன்கொடுனர்) | 400 | 7 600 |
| | | | | 01.26 | கரன் (கடன்கொடுனர்) | 600 | 11 400 |
| | | | | 01.27 | வங்கி | | 9 000 |
| | | | | 01.31 | மீதி.கீ.கொ.செ | | 282 600 |
| | | 400 | 420 600 | | | 1000 | 420 600 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | | 282 600 | | | | |

வரவு **வங்கிக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | கழிவு ரூ. | காசு ரூ | திகதி | விபரம் | கழிவு ரூ. | காசு ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.01.03 | காசு | | 20 000 | 20XX.01.08 | கொள்வனவு | | 15 000 |
| 01.11 | சுவர்ணா(கடன்பட்டோர்) | 300 | 6 200 | 01.18 | வாடகை | | 2 000 |
| 01.27 | காசு(கௌரி) | | 9 000 | 01.31 | மீதி.கீ.செ | | 18 200 |
| | | | 35 200 | | | | 35 200 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | | 18 200 | | | | |

**கொள்வனவு நாட்குறிப்பு**

| திகதி | பட்டியல் இல | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 20XX.01.06 | 45 | சுரங்கி | 24 000 |
| 01.08 | 116 | கரன் | 20 000 |
| 01.31 | | கொள்வனவு கணக்கிற்கு மாற்றியது | 44 000 |

**விற்பனை நாட்குறிப்பு**

| திகதி | பட்டியல் இல | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 20XX.01.05 | 01 | சுவர்ணா | 19 000 |
| 01.09 | 02 | கௌரி | 25 000 |
| 01.31 | | விற்பனைக் கணக்கிற்கு மாற்றியது. | 44 000 |

வரவு **வங்கிக்கடன் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.12 | காசு | 3 000 | 20XX.01.04 | காசு | 50 000 |
| 01.31 | மீதி.கீ.கொ.செ | 47 000 | | | |
| | | 50 000 | | | 50 000 |
| | | | 02.01 | மீதி.கீ.கொ.வ | 47 000 |

வரவு **சுவர்ணா (கடன்படுனர்)கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.05 | விற்பனை | 19 000 | 20XX.01.10 | காசு | 11 600 |
| | | | 01.10 | கழிவு | 400 |
| | | | 01.11 | வங்கி | 6 200 |
| | | | 01.11 | கழிவு | 300 |
| | | | 01.31 | மீதி கீ.கொ.செ | 500 |
| | | 19 000 | | | 19 000 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | 500 | | | |

வரவு **கௌரி (கடன்பட்டோர்)கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.09 | விற்பனை | 25 000 | 20XX.01.20 | காசு | 9 000 |
| | | | | மீதி.கீ.கொ.செ | 16 000 |
| | | 25 000 | 01.31 | | 25 000 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | 16 000 | | | |

வரவு **சுரங்கி (கடன் கொடுநர்) கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.25 | காசு | 7 600 | 20XX.01.06 | கொள்வனவு | 24000 |
| 01.25 | கழிவு | 400 | | | |
| 01.31 | மீதி.கீ.கொ.செ | 16 000 | | | |
| | | 24 000 | | | 24 000 |
| | | | 02.01 | மீதி.கீ.கொ.வ | 16 000 |

வரவு **கரன் (கடன் கொடுநர்) கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.26 | காசு | 11 400 | 20XX.01.08 | கொள்வனவு | 20 000 |
| 01.26 | கழிவு | 600 | | | |
| 01.31 | மீதி.கீ.கொ.செ | 8 000 | | | |
| | | 20 000 | | | 20 000 |
| | | | 02.01 | மீதி.கீ.கொ.வ | 8 000 |

வரவு **மூலதனக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.31 | மீதி.கீ.கொ.செ | 200 000 | 20XX.01.01 | காசு | 200 000 |
| | | 200 000 | | | 200 000 |
| | | | 02.01 | மீதி.கீ.கொ.வ | 200 000 |

வரவு **கொடுத்த கழிவுக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.31 | கடன்பட்டோர் | 400 | 20XX.01.31 | மீதி.கீ.கொ.செ | 700 |
| 01.31 | கடன்பட்டோர் | 300 | | | |
| | | 700 | | | 700 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | 700 | | | |

வரவு **பெற்ற கழிவுக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.31 | மீதி.கீ.கொ.செ | 1 000 | 20XX.01.31 | கடன்கொடுத்தோர் | 1 000 |
| | | 1 000 | | | 1 000 |
| | | | 02.01 | மீதி.கீ.செ | 1 000 |

வரவு **கொள்வனவுக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.31 | காசு | 85 000 | 20XX.01.31 | மீதி.கீ.கொ.செ | 144 000 |
| 01.31 | வங்கி | 15 000 | | | |
| 01.31 | கடன் கொடுத்தோர் | 44 000 | | | |
| | | 144 000 | | | 144 000 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | 144 000 | | | |

வரவு **விற்பனைக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.31 | மீதி.கீ.கொ.செ | 194 000 | 20XX.01.05 | காசு | 150 000 |
| | | | 01.31 | கடன்பட்டோர் | 44 000 |
| | | 194 000 | | | 194 000 |
| | | | 02.01 | மீதி.கீ.கொ.வ | 194 000 |

வரவு **வாடகைக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | தொகை ரூ. | திகதி | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 20XX.01.08 | காசு | 2 000 | 01.31 | மீதி.கீ.கொ.செ | 4 000 |
| 01.18 | வங்கி | 2 000 | | | |
| | | 4 000 | | | 4 000 |
| 02.01 | மீதி.கீ.கொ.வ | 4 000 | | | |

கவிதா வணிகத்தின்
20XX.01.31 திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதி

| விபரம் | வரவு<br>ரூ. | செலவு<br>ரூ. |
|---|---|---|
| காசு | 282 600 | |
| வங்கி மீதி | 18 200 | |
| மூலதனம் | | 200 000 |
| கொடுத்த கழிவு | 700 | |
| பெற்ற கழிவு | | 1 000 |
| கொள்வனவு | 144 000 | |
| விற்பனை | | 194 000 |
| வாடகை | 4 000 | |
| கடன்பட்டோர் சுவர்ணா | 500 | |
| கௌரி | 16 000 | |
| கடன் கொடுத்தோர் சுரங்கி | | 16 000 |
| கரன் | | 8 000 |
| வங்கிக்கடன் | | 47 000 |
| | 466 000 | 466 000 |

## செயற்பாடு 01

கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளைக் கருத்திற் கொண்டு கோசலை வணிகத்தின் 20XX.09.30 திகதியிலுள்ள பரீட்சை மீதியைத் தயாரிக்குக.

| | ரூ. |
|---|---|
| கடன்பட்டோர் | 80 000 |
| நிலையான வைப்பு | 158 000 |
| கடன்கொடுத்தோர் | 60 000 |
| கொடுத்த கழிவு | 4 000 |
| கொள்வனவு | 250 000 |
| இயந்திர உபகரணங்கள் | 120 000 |
| பெற்ற கழிவு | 9 000 |
| வங்கி மேலதிகப்பற்று | 15 000 |
| சம்பளம் | 20 000 |
| 20XX.01.01 இல் மூலதனம் | 200 000 |
| வட்டி வருமானம் | 8 000 |
| காசு | 40 000 |
| விற்பனை | 380 000 |

## செயற்பாடு 02

தைக்கப்பட்ட ஆடைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் ஆனந்தன் நிறுவனத்தின் 20XX.03.31 திகதியில் மீதிகள் கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ. |
| கையிலுள்ள காசு | | | 80 000 |
| வங்கியிலுள்ள காசு | | | 60 000 |
| கடன்பட்டோர் | சூரியா | 50 000 | |
| | சுருதி | | 40 000 |
| மூலதனம் | | | 150 000 |
| கடன் கொடுத்தோர் | விஜய் | | 45 000 |
| | நதியா | | 35 000 |

20XX மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கடன் கொள்வனவுகள்

| திகதி | பட்டியல் இல | தொகை ரூ. | ஏனைய விபரங்கள் |
|---|---|---|---|
| 20XX.03.05 | 45 (அனுஸ்கா) | 38 000 | வியாபாரக் கழிவு 10% |
| 20XX.03.08 | 56 (தனுஸ்கா) | 42 000 | |
| 20XX.03.12 | 48 (அனுஸ்கா) | 34 000 | வியாபாரக் கழிவு 5% |
| 20XX.03.18 | 59 (தனுஸ்கா) | 25 000 | வியாபாரக் கழிவு 4% |

கடன் விற்பனை

| திகதி | பட்டியல் இல | ஏனைய விபரங்கள் |
|---|---|---|
| 20XX.03.07 | 62 (கண்ணகி) | ஒன்று ரூ. 1500 வீதம் 20 மேற்சட்டைகள் |
| 20XX.03.10 | 63 (சீதை) | ஒன்று ரூ. 2000 வீதம் 25 காற்சட்டைகள் |
| 20XX.03.15 | 64 (கண்ணகி) | ஒன்று ரூ. 600 வீதம் 40 பாவாடைகள் |
| 20XX.03.20 | 65 (சீதை) | ஒன்று ரூ. 1800 வீதம் 20 புடைவைகள் |

கடனுக்கு விற்பனை செய்யும் பொழுது 10% வியாபாரக் கழிவு வழங்குவது வணிகத்தின் நடைமுறையாகும்.

பெறுவனவுகள் தொடர்பான விபரங்கள்

| திகதி | காசு ரூ | காசோலைகள் ரூ | வேறு விபரங்கள் |
|---|---|---|---|
| 20XX.03.02 விற்பனை | 20 000 | 5 000 | காசோலை இத்தினமே வைப்பிலிடப் பட்டது. |
| 03.03 கண்ணகியிடம் பெற்றது | 8 500 | ——— | |
| 03.06 சீதையிடம் பெற்றது. | ——— | 12 400 | இக் காசோலை 20XX.03.06 அன்று வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 03.07 கண்ணகியிடம் பெற்றது | 16 000 | 12 000 | இக்காசோலை 20XX.03.10 அன்று வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 03.13 சீதையிடம் பெற்றது | 8 000 | ——— | |

கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள்

| திகதி | காசு ரூ. | காசோலைகள் ரூ. |
|---|---|---|
| 20XX.03.09 அனுஸ்காவிற்கு | ——— | 13 000 |
| 03.10 தனுஸ்காவிற்கு | 15 400 | ——— |
| 03.11 கொள்வனவு | 16 000 | 14 000 |
| 03.20 சம்பளம் | 8 000 | 12 000 |
| 03.22 தனுஸ்கவிற்கு | ——— | 15 200 |

பின்வருவனவற்றைக் காண்க.

01. காசுக்கணக்கு
02. வங்கிக் கணக்கு
03. கொள்வனவு நாட்குறிப்பு
04. விற்பனை நாட்குறிப்பு
05. உரிய பேரேட்டுக் கணக்குகள்
06. 20XX.03.31ஆந் திகதியில் உள்ள படியான பரீட்சை மீதி